1994 ஏப்ரல் 13]

பொருள் பற்றி இதே அவையில் திரும்ப எழுப்ப முடியாது என்பதுதான் என்னுடைய முடிவு. (குறுக்கீடு) போதும். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) நீங்கள் அதைத் திரும்ப எழுப்ப முடியாது. வேறு வகையில் எழுப்புங்கள். (குறுக்கீடு) சீரோ அவரிலே அதை எழுப்ப முடியாது. (குறுக்கீடு) விதி 56-ஐ படித்துப் பாருங்கள். அதிலே ஒரு முறை, ஒரு பிரச்சினை பற்றி எழுப்பிவிட்டால், அதே பொருள் பற்றித் திரும்ப எழுப்ப முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள், நான் நிற்கிறேன். நான் நின்றால் நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) அதை வேறு வகையிலே எழுப்புங்கள். இந்தமாதிரி எழுப்பக் கூடாது.

4. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு (Board of Management) ஒரு உறுப்பினரை இச்சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கோரியுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்படுவோரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவரின் பதவிக் காலம் முடிவடையும்.

வேட்பாளர்கள் நியமனத் தாள்களை *20-4-1994* புதன்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் *21-4-1994* வியாழக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் *22-4-1994* வெள்ளிக்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் *25-4-1994* திங்கட்கிழமை

[1994 ஏப்ரல் 13

காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 2-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கொடுப்பு நடைபெறும்.

5. கவன ஈர்ப்பு

நன்னிலத்தில் அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தில் ரெகுலேட்டர் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் பாசனத்திற்குப் பயன்படாதது குறித்து.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் க. கோபால் அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் செயற் பொறியாளர் உபகோட்டத்தில் அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தில் கட்டியுள்ள ரெகுலேட்டர் இடிந்து தண்ணீர் பாசனத்திற்கு உபயோகமற்றதாக உள்ளது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

நன்னிலம் தொகுதி, அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தின் அருகில் உள்ள ரெகுலேட்டர் கடந்த 1993-ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளது. அவற்றைப் புதுப்பிக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. இந்த அடைப்புக் காலத்திற்குள் இப்பணி முடிவடைந்து, வரும் பாசனக் காலத்தில் தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் புதுப்பிக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்